*முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு*
*இறையென்று வைக்கப் படும்.*
*-குறள்*

***மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் அவர்களே!***
***மதிப்புமிக்க அவை உறுப்பினர்களே!***

இந்த அவையின் மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் புதுச்சேரி மக்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கத்தையும் நல் வாழ்த்துக்களையும் இந்த நினைவுகூரத்தக்க தருணத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். ஆண்டு வரவு-செலவுத் திட்டம் நம்முடைய மக்களின் விருப்பங்களை வெளியில் கொண்டு வருகின்றது என்பதால் அதைத் தாக்கல் செய்வது என்பது ஒரு முக்கிய நிகழ்வாகும். இதன்மூலம், மக்களின் விருப்பங்களை இந்த மேன்மைமிகு அவை ஒன்றிணைந்து நிறைவேற்றும். மக்களவைத் தேர்தல் காரணமாக, என்னுடைய அரசு முன்பே அதன் ஆண்டு நிதிநிலை அறிக்கையைத் தாக்கல் செய்ய இயலவில்லை.

2009 மார்ச் மாதம் நடைபெற்ற கடந்த கூட்டத்தொடரில், தேவையான அரசு செலவினத்தை மேற்கொள்வதற்கான முன்னளி மானிய அனுமதியைக் கோர மட்டுமே முடிந்தது. எனக்கு முன்பு துணைநிலை ஆளுநராக இருந்த கற்றறிந்த அறிஞர் திரு கோவிந்த் சிங் குர்ஜார் அவர்களின் அகால மரணம் காரணமாக என்னுடைய அரசுக்குப் பின்னடைவு ஏற்பட்டது. நீடித்த வளர்ச்சியின் மூலம் ஏழை மற்றும் ஒடுக்கப்பட்ட மக்களின் நலனை மேம்படுத்துவதில் அவர் ஊக்கமளிக்கும் ஆதாரமாகத் திகழ்ந்தார். அவருடைய மறைவு தேசத்திற்கு ஈடுசெய்ய முடியாத மிகப்பெரும் இழப்பாகும். அவர் பதவி வகித்த குறுகிய காலத்தில் இந்த ஆட்சிப்பரப்புக்கு அவர் ஆற்றிய பங்களிப்புக்கு என்னுடைய அரசு கடன்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**2.** என்னுடைய அரசு எடுக்கும் ஒவ்வொரு நடவடிக்கைக்கும் மத்திய அரசு எப்போதும் அதன் முழுமையான ஆதரவை அளித்து வருகிறது. மக்களவைத் தேர்தலின்போது அளிக்கப்பட்ட அனைத்து வாக்குறுதிகளும் முழுமையாகவும் துணிவுடனும்

நிறைவேற்றப்படும் என இந்த மேன்மைமிகு அவைக்கு என்னுடைய அரசு மீண்டும் உறுதியளிக்கிறது. என்னுடைய அரசு நம் ஆட்சிப்பரப்பு மக்களின் பெரும் நலன் கருதி இந்த மேன்மைமிகு அவையின் ஒட்டுமொத்த ஆதரவைக் கோருகிறது.

**3.** உலகப் பொருளாதாரத்தில் நிலவும் மந்த நிலை நம் ஆட்சிப்பரப்பிலும் அதன் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. குறிப்பாக, தனியார் முதலீட்டுத் துறை வாய்ப்பைப் பெறுவதிலும் இரண்டாம் மற்றும் மூன்றாம் நிலை துறைகளில் வேலைவாய்ப்புகளை உருவாக்குவதிலும் பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது. தேசிய அளவில் மத்திய அரசால் எடுக்கப்பட்ட பல்வேறு நடவடிக்கைகள் ஒட்டுமொத்தப் பொருளாதாரத்தில் எழுச்சிநிலையை மீண்டும் கொண்டுவருவதில் மிகச் சிறிதளவான விளைவையே கொண்டிருக்கும்போது, என்னுடைய அரசு இச்சவாலை முறியடித்து ஆண்டுத் திட்ட ஒதுக்கீட்டை உயர்த்தும் உறுதியான நடவடிக்கை மூலம் ஒட்டுமொத்த வரவு-செலவுத் திட்டப் பற்றாக்குறையைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுக்கத் திட்டமிட்டுள்ளது.

4. மத்திய ஆறாவது சம்பளக் குழுவின் பரிந்துரை காரணமாக, கடந்த நிதியாண்டில் நம்முடைய வளஆதாரம் பெருமளவு குறைந்தது. பெரிய அளவில் மத்திய நிதி உதவி வந்திருந்தபோதிலும் தன்னாட்சி அமைப்புகளில் பணிபுரியும் ஏராளமான ஊழியர்கள் புதிய சம்பளத்தை பயன்பெற இயலவில்லை. அவர்கள் இந்த ஆண்டில் பயன் பெறுவர். இதுமட்டுமின்றி, அரசு ஊழியர்களுக்கு அளிக்கப்படவேண்டிய எஞ்சிய நிலுவைத்தொகை அளிப்பது திட்டமிடப்பட்ட வளர்ச்சிக்குக் கிடைக்கும் வளஆதாரங்களை மேலும் குறைக்கும். எனவே, கூடுதல் வளஆதாரங்களைத் திரட்டுவதற்கான பலன்தரும் நடவடிக்கைகளை உடனடியாக எடுக்க வேண்டியது அவசியம் ஆகும். கூடுதல் வளஆதாரங்கள் தேவையுள்ளதால், நம்முன் உள்ள சவாலை புதுச்சேரி ஆட்சிப்பரப்பில் வளஆதாரங்களை மேலும் பெருக்குவதற்கான ஒரு வாய்ப்பாக மாற்றவேண்டியது அவசியம். என்னுடைய அரசு இதுகுறித்து குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைச் செய்துள்ளது. அது, இந்த ஆட்சிப்பரப்பு முழுமையிலும் உள்கட்டமைப்பை

மேம்படுத்துவதற்கான புதிய திட்டங்களின் செயற்பாடாக மாற்றமடையும் என்பதை இந்த மேன்மைமிகு அவைக்குத் தெரிவிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

**5.** என்னுடைய அரசு இந்த ஆண்டிற்கு ரூ. 4,133 கோடி ஒதுக்கீடு செய்யத் திட்டமிட்டுள்ளது. அதில், திட்டத்தின்கீழ் ரூ. 2,250 கோடியும், திட்டம் சாராத இனத்தின்கீழ் ரூ. 1,846.20 கோடியும், மத்திய ஊக்குவிப்புத் திட்டங்களின்கீழ் ரூ. 36.80 கோடியும் அடங்கும். கடந்த ஆண்டைவிட 29% அதிகமான உயர் திட்ட ஒதுக்கீட்டை நிர்ணயித்துள்ள திட்டக் குழுவுக்கு நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டுள்ளேன். திட்டத்திற்கு நிதியளிப்பதற்காக வளஆதாரங்களைத் திரட்ட வேண்டியுள்ளது. இதுகுறித்து தங்களது மதிப்புமிக்க கருத்துரைகளை அளிக்குமாறு மாண்புமிகு உறுப்பினர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**6.** என்னுடைய அரசின் தொடர் முயற்சியின் காரணமாக, புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் பல்வேறு உள்கட்டமைப்பு தொடர்பான பணிகளை

மேற்கொள்வதற்காக RIDF-இன்கீழ் ரூ. 54.57 கோடி கடன் அளிக்க நபார்டு வங்கி ஒப்புக்கொண்டுள்ளது. காரைக்காலில், திருநள்ளாறு கோயில் நகர் வளர்ச்சித் திட்டத்திற்கான மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்வதற்காக ஹட்கோ (HUDCO) ரூ. 146 கோடி கடன் அளிக்க ஒப்புக்கொண்டுள்ளது. இது காரைக்கால் பகுதியின் பொருளாதார முன்னேற்றத்தைத் துரிதப்படுத்தும். மேலும், அங்கு சுற்றுலாப் பயணிகளின் வருகையையும் அதிகரிக்கும்.

**7.** கடந்த ஆண்டில் என்னுடைய அரசால் உறுதியளிக்கப்பட்டவாறு, புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் 45 ஹெக்டேர் பரப்பில் துல்லிய விவசாய முறை செயல்படுத்தப்பட்டுள்ளது. வேளாண்பொருட்களின் விற்பனைக்கு ஊக்கமளிக்கும்பொருட்டு, அரியாங்குப்பத்தில் உழவர் சந்தை ஒன்றும், மடுகரையில் ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் ஒன்றும் திறக்கப்பட்டன. தேசிய தோட்டக்கலைத் திட்டத்தின்கீழ், புதுச்சேரி மாநில தோட்டக்கலை மேம்பாட்டுச் சங்கம் தொடங்கப் பட்டுள்ளது. அரசு, கால்நடை நிலையங்களின் நன்கு

வளர்ச்சிபெற்ற வலைப்பின்னல்மூலம் பண்ணைத் தொழில் மற்றும் கோழிவளர்ப்புத் தொழிலின் நலனைப் பாதுகாப்பதில் தொடர்ந்து சிறப்புக் கவனம் செலுத்தி வருகிறது.

**8.** என்னுடைய அரசு, ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 5,000 இடுபொருள் மானியம் அளித்து கடந்த ஆண்டு 295 ஏக்கர் பரப்பை மீன்வளர்ப்பின்கீழ் கொண்டுவருவதற்கான நடவடிக்கையை எடுத்துள்ளது. மீன்பிடித் தொழில் அபாயகரமானதாக இருப்பதால், 13,000 மீனவர்களுக்கு உயிர்காக்கும் உடைகள் இலவசமாக வழங்கப்பட்டன.

**9.** மின்தடைக் காலத்தைக் குறைக்கும் பொருட்டும் EHV துணை மின்நிலையங்களுக்குத் தடையற்ற மின்சக்தி வழங்குதலை மேம்படுத்தும் பொருட்டும், 110 கிலோவாட் வளைய முதன்மைமுறை அமைக்கத் (Ring Main System) திட்டமிடப்பட்டது. திருபுவனை மற்றும் தேத்தாம்பாக்கம் EHV துணை மின் நிலையங்களை குரும்பாப்பட்டு மற்றும் சேதராப்பட்டு

EHV துணை மின்நிலையங்களுடன் இணைக்கும் 110 கிலோவாட் மின்மாற்று வழித்தடம் நிறுவப்பட்டது. இந்திய மின்சக்தி வினியோக வரைநிலைக் கழகத்திடம் (Power Grid Corporation of India Ltd.) ஒப்படைக்கப்பட்ட வில்லியனூர் 110 கிலோவாட் துணை மின்நிலையத்தைப் புனரமைக்கும் பணி தொடங்கி நடைபெற்று வருகிறது. ஏனாமில் துணை மின்நிலையப் பணி ஏற்கனவே நிறைவு செய்யப்பட்டு 2009 ஜனவரி மாதத்தில் நாட்டுக்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ளது.

**10.** என்னுடைய அரசு, முதலீடு மற்றும் தொழிற்சாலைகள் அமையும் சூழலை மேம்படுத்துவதற்காக அயல்நாடுகளில் வாழும் இந்தியர்களுக்கெனத் (NRIs) தனியே இணையதளம் ஒன்றை தொழில் மற்றும் வர்த்தக இயக்ககத்தின் மூலம் 2008 ஆகஸ்ட் மாதம் தொடங்கியுள்ளது. உலகப் பொருளாதார வீழ்ச்சியின் காரணமாகவும், தொழில் உற்பத்தி, வாணிகம் மற்றும் வியாபாரத்தின் மீதான தாக்கத்தின் விளைவாகவும் பொருளாதாரத்தில் மந்தநிலை ஏற்பட்டுள்ளது என்பதை என்னுடைய அரசு முழுமையாக அறிந்துள்ளது.

மத்திய அரசும், இந்திய ரிசர்வ் வங்கியும், பொருளாதாரத்தை ஊக்குவிப்பதற்காக வட்டி விகிதங்களைக் குறைத்தல் மற்றும் ஏற்றுமதியைத் தொடங்குவதற்குச் சலுகையளித்தல் உள்ளிட்ட ஏராளமான நிதிச் சலுகைகளை ஏற்கனவே அறிவித்து உள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கறிவர். புதுச்சேரியின் பொருளாதாரத்தையும் தொழில் உற்பத்தியையும் பெருக்குவதற்கு இந்திய அரசு எடுக்கும் முயற்சிக்கு என்னுடைய அரசும் துணை நிற்கும்.

**11.** கைவினைப் பொருட்களை அறிமுகப்படுத்தி அவற்றை விற்பனை செய்யும் நோக்கில் 15 நாட்கள் காந்தி ஷில்ப் அங்காடி புதுச்சேரியில் ஏற்பாடு செய்யப்பட்டது. அந்த அங்காடி நெசவாலை அமைச்சகம், வளர்ச்சி ஆணையர் (கைவினை) மற்றும் புதுச்சேரி புதுமை கைவினைக் கலைஞர்கள் கூட்டுறவுச் சங்கத்தினரால் இணைந்து பத்து நாட்களும் மாவட்ட தொழில் மையத்தினால் ஐந்து நாட்களும் நடத்தப்பட்டது. பல்வேறு மாநிலங்களிலிருந்து,

மொத்தம் 282 கைவினைக் கலைஞர்கள் தங்களது படைப்புகளைக் காட்சிக்கு வைப்பதற்காகப் புதுச்சேரியில் கூடினர். அக்கண்காட்சி, நாட்டின் அனைத்துப் பகுதியிலிருந்தும் வரும் கைவினைப் பொருட்களை ஓரிடத்திலே காணும் வாய்ப்பை மக்களுக்கு ஏற்படுத்தியது. அது கைவினைக் கலைஞர்களுக்கிடையில் பண்பாட்டுப் பரிமாற்றம் ஏற்படுவதற்கு வழிவகுத்தது மட்டுமின்றி அவர்களுக்கிடையில் தொழில்நுட்ப விவரங்களைப் பகிர்ந்து கொள்வதற்கும் வாய்ப்பளித்தது.

**12.** கூடுதல் உணவுக்கூடத்துடன் கூடிய சீகல்ஸ் உணவகமும், சுண்ணாம்பாறு நீர் விளையாட்டுக் கட்டிட வளாகத்தில் 7 அறைகளைக் கொண்ட "ஆற்று உணவு விடுதி"யும் தொடங்கப்பட்டுள்ளன. ATR வகை விமானங்களை இயக்க வகைசெய்வதற்கான புதுச்சேரி விமான நிலைய ஓடுதளம் முடிவடையும் நிலையில் உள்ளது. கடந்த ஆண்டு நான்கு உணவகங்கள் திறக்கப்பட்டு 199 அறைகள் கூடுதலாக்கப்பட்டுள்ளன. சுற்றுலாத் துறையானது அதன் வளமான பண்பாட்டு மரபு சார்ந்த மாளிகைகளைச் சிறப்பித்துக்காட்டும் வகையில் 2009-ஆம் ஆண்டு

இந்தியப் புலம்பெயர்ந்தோர் பண்பாட்டுச் சந்திப்பு எனப்படும் பெருங்கடல் சார்ந்த பண்பாட்டு விழாவை இந்திய அரசு, அயல்நாட்டு இந்திய விவகாரங்கள் அமைச்சகம் மற்றும் அலையன்ஸ் பிரான்ஸிஸ் நிறுவனத்துடன் இணைந்து வெற்றிகரமாக நடத்தியது. சுற்றுச்சூழல் முக்கியத்துவம் வாய்ந்த மரபுசார்ந்த கட்டிடங்கள், மனையிடங்கள் மற்றும் தெருக்களைப் பாதுகாப்பதற்காக நீண்டகாலத் திட்டம் ஒன்றை வகுப்பதற்கு மாநில அளவிலான மரபுரிமை பாதுகாப்பு ஆலோசனைக் குழு ஒன்றை புதுச்சேரி அரசு அண்மையில் அமைத்துள்ளது. 2002-2004-ஆம் ஆண்டில், ஆசியா நகரகத் திட்டத்தின்கீழ், புதுச்சேரி அரசு மற்றும் கலை மற்றும் பண்பாட்டு மரபுரிமைக்கான இந்திய தேசிய அறக்கட்டளையால் (INTACH) மேற்கொள்ளப்பட்ட வைசியாள் தெரு சீராக்கத் திட்டம், பண்பாட்டு மரபுரிமைப் பாதுகாப்புத் திட்டத்திற்கான UNESCO ஆசிய பசிபிக் மரபுரிமை விருதினைப் பெறுவதற்காகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளது என்பதை இந்த அவையின் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

13. பொதுப்பணித் துறை, வில்லியனூரில் ஒன்றும் செல்லிப்பட்டில் மற்றொன்றுமாக இரண்டு நீர் மறுசெறிவூட்டல் முறைகளைக் கட்டி முடித்துள்ளது. ஜவகர்லால் நேரு தேசிய நகரக புனரமைப்புத் திட்டத்தின் (JNNURM)கீழ் புதுச்சேரியின் அனைத்து துணை நகரகப் பகுதிகளிலும் பாதாள சாக்கடை வசதி அளிப்பதற்காக ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளன.

14. ‘பரிசுத்தமான மற்றும் பசுமையான புதுச்சேரி’ என்னும் ஒரு கொள்கையைப் பிரச்சாரம் செய்யவும் அதைச் செயல்படுத்தவும் என்னுடைய அரசு ஒரு குழுவை அமைத்துள்ளது. பறவைகள் சரணாலயத்திற்காக, ஊசுடு ஏரி ஒரு பாதுகாக்கப்பட்ட பகுதியாக அறிவிக்கப்பட்டுள்ளது.

15. 2009 மார்ச் மாதத்தின்போது அனைத்து 98 கிராமக் கொம்யூன் பஞ்சாயத்துகளுக்கும் அனைத்துத் துணைப் பொருட்களுடன்கூடிய கணினிகள் வழங்கப் பட்டன.

**16.** கல்வித் துறையில், அனைவருக்கும் கல்வித் திட்டத்தின்கீழ் (Sarva Siksha Abiyan) மூன்று புதிய தொடக்கப் பள்ளிகள் திறக்கப்பட்டன. ஒரு நடுநிலைப் பள்ளி உயர்நிலைப் பள்ளியாகவும், நான்கு உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் நிலை உயர்த்தப் பட்டன. குமரப்பருவ மாணவிகளுக்கு வழிகாட்டவும் ஆலோசனைகள் வழங்கவும் சிறப்புக் கவனம் செலுத்தும் பொருட்டு, 15,399 பெண்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. 23,096 மாணவிகளுக்குப் பயிற்சி அளிக்க என்னுடைய அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. அனைத்து கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும் NAACயின் அங்கீகாரம் பெற்றுள்ளன. புதுச்சேரியில் உள்ள அரசு மற்றும் தனியார் பள்ளிகளின் பிரெஞ்சு ஆசிரியர்களுக்குப் பயிற்சியளிக்க அலையன்ஸ் பிரான்சிஸ் நிறுவனத்துடன் இந்த ஆட்சிப்பரப்பு நிருவாகம் ஒரு உடன்படிக்கை செய்து கொண்டுள்ளது. முதல் கட்டமாக சுமார் 30 ஆசிரியர்கள், வல்லுநர்களால் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளனர். இரண்டாம் கட்டத்தில் இத்திட்டம் காரைக்கால், மாகி மற்றும் ஏனாம் பகுதிகளிலுள்ள ஆசிரியர்களுக்கும் விரிவுபடுத்தப்படும்.

அரிய நிகழ்வாக, அரசு, 6 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு ஆண்டுதோறும் ரூ. 250 கைச்செலவு பணம் அளித்து வருகிறது. ஒருவார காலம் நடைபெற்ற 2009 தேசிய குழந்தைகள் விழாவுக்காக 19 மாநிலங்களைச் சேர்ந்த சுமார் 480 குழந்தைகள் புதுச்சேரியில் ஒன்றுகூடினர். இவ்விழாவை கல்வித் துறையும், சுற்றுலாத் துறையும் இணைந்து நடத்தின. இந்த குழந்தைகள் விழா, அனைத்து மாநிலங்களிலிருந்து வந்த குழந்தைகளுக்கு நாட்டின் வெவ்வேறு பகுதிகளில் வழங்கிவரும் பலவகைப்பட்ட பண்பாட்டினைச் செயலெதிர்கொள்வதற்கும், புரிந்து கொள்வதற்கும் ஒரு பொது மேடையை உருவாக்கித் தருகிறது. அது சமயப் பிரார்த்தனைகள், பண்பாட்டுச் செயல்பாடுகள், விளையாட்டுகள் மற்றும் இலக்கியச் செயலெதிர்கொள்ளல் மூலம் ஒருவருக்கொருவர் மதித்து நடத்தல் மற்றும் ஒற்றுமை ஆகியவற்றை நிலைநாட்டுவதற்கு இளம் இதயங்களை ஒன்றிணைக் கின்றது. அவ்விழா குழந்தைகளின் ஆளுமை மற்றும் குழந்தைகளிடையே செயலெதிர்கொள்வதற்கான ஒரு வாய்ப்பை ஏற்படுத்தியது மற்றும் புதுச்சேரியில் ஒரு சிறு-இந்தியாவை உருவாக்கியது.

17. புதுச்சேரி, இந்தியாவின் மற்ற மாநிலங்களில் உள்ளதைவிடவும் உயர்ந்த நலவழிப் பாதுகாப்பு உள்கட்டமைப்பைப் பெற்றுள்ளது. இந்த ஆட்சிப்பரப்பு, பூகோள ரீதியாக நான்கு பகுதிகளாகப் பிரிக்கப் பட்டுள்ளதால் பிரச்சனைகள் ஏற்பட்டிருப்பினும்கூட பல்வேறு சுகாதாரக் காரணிகளில் தேசிய இலக்கை எட்டுவதில் புதுச்சேரி இந்தியாவின் மற்ற மாநிலங்களைவிடவும் சிறந்த நிலையிலேயே உள்ளது. இதய சிகிச்சைக்காக Cath Lab. ரூ. 4.88 கோடி செலவில் அமைக்கப்பட்டுள்ளது. இது இதய நோயைக் கண்டறிவதற்கும் ஆஞ்சியோ பிளாஸ்டி இதயச் சிகிச்சை அளிப்பதற்கும் வசதியை ஏற்படுத்தும். தேசிய ஊரக நலவழித் திட்டத்தின் (NRHM)கீழ் பாகூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் ஒன்றும் காரைக்கால் விழிதியூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் ஒன்றுமாக இரண்டு நடமாடும் மருத்துவ ஊர்திகள் அளிக்கப்பட்டுள்ளன. இந்த வசதி ஊரக மக்களின் மருத்துவத் தேவையைப் பூர்த்தி செய்யும். புதுச்சேரி மக்களின் முக்கியமான சுகாதார நலன்கள் இந்திய அரசால் 2015-ஆம் ஆண்டுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள இலக்கை அடையும் நிலையில் உள்ளது. ஆபத்தான நோய்களால்

பாதிக்கப்படும் ஊரக மக்களைப் பாதுகாக்கும்பொருட்டு தேசிய ஊரக நலவழித் திட்டத்தின் (NRHM)கீழ் புதுச்சேரியில் பாகூரிலும் காரைக்காலில் விழிதியூரிலும் நடமாடும் மருத்துவக் குழு வசதி அளிக்கப்பட்டுள்ளது.

**18.** அடிப்படையில் நம்முடைய மாநிலம் மக்களின் நலம் காக்கும் மாநிலம் ஆகும். ஆதி-திராவிட மக்கள், பெண்கள், குழந்தைகள், முதியோர் மற்றும் ஊனமுற்றோர் நலனை மேம்படுத்துவதற்காக அரசு பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. சமுதாயத்தில் பெண்கள் மற்றும் நலிந்த பிரிவினருக்கு சமநிலையான வாய்ப்புகளை அளிப்பதன் மூலம் சமூக-பொருளாதார வளர்ச்சியை விரைவுபடுத்துவதே அரசின் திட்டமாகும். என்னுடைய அரசு, பொதுவாக மக்கள் நலன் குறிப்பாக பெண்கள் மற்றும் குழந்தைகள் நலன் காக்க உறுதி பூண்டுள்ளது, இதற்கிணங்க, 494 விதவைகளின் மகள்களுக்கு அவர்களின் திருமணத்திற்காக தலா ரூ. 20,000 நிதி உதவி அளிக்கப்பட்டது. 3,471 கருவுற்ற மகளிர்களுக்கு நிதி உதவியாக தலா ரூ. 500 அளிக்கப்பட்டது. மேலும், பெண் குழந்தைகளுக்குப்

பாலூட்டும் 1,354 தாய்மார்களுக்கு நிதி உதவியாக தலா ரூ. 1,200 அளிக்கப்பட்டது. முதியோர், விதவை மற்றும் ஆதரவற்ற பெண்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் திட்டத்தின்கீழ் தற்போதுள்ள 97,770 பயனாளிகளுக்கும், கூடுதலாக 11,027 புதிய பயனாளிகளுக்கும் ஓய்வூதியம் அளிக்கப்பட்டது.

**19.** அனைத்து துணைப் பதிவாளர் அலுவலகங்களிலும் பதிவு செய்யும் நடைமுறை முழுமையாகக் கணினிமயமாக்கப்பட்டுள்ளது. நிஷா புயலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு, இடருதவிச் செயல்பாடுகளை மேற்கொள்ள ரூ. 42 கோடி தொகை செலவிடப்பட்டுள்ளது. என்னுடைய அரசு, சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்காக, சோலை நகர் தெற்குப் பகுதியில் 132 வீடுகளையும், வைத்திக்குப்பத்தில் 180 வீடுகளையும் கட்டிக் கொடுத்துள்ளது. புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் சுனாமியால் பாதிக்கப்பட்ட கடற்கரை கிராமங்களில் வசிக்கும் மீனவர்களுக்கு, 2009 பிப்ரவரி மாதத்தின்போது 700 வீடுகள் அளிக்கப்பட்டன. காளிக்குப்பத்தில்

170 வீடுகள், கருக்கலாச்சேரியில் 300 வீடுகள் மற்றும் காலாப்பட்டு எம்.ஜி.ஆர். நகரில் 125 வீடுகள் ஆகியவற்றின் கட்டுமானப் பணி நிறைவடைந்து அவை ஒதுக்கீடு செய்யப்பட்டன. நரம்பையில் 150 வீடுகள் மற்றும் சோலை நகரில் 274 வீடுகள் கட்டும் பணி ஒரு சில மாதங்களில் நிறைவடையும்.

**20.** மக்களாட்சியில் மக்களின் வாழ்க்கைத் தரம் காவல் துறை செயல்பாட்டுடன் நேரடித் தொடர்பு கொண்டுள்ளது. காவல் துறையின் செயல்பாட்டுப் பொறுப்புகள் சமுதாயத்தின் வளர்ச்சி வீதத்திற்கேற்ப வளர்ந்துள்ளது. மக்கள் தொகை உயர்வுக்கேற்ப காவல் துறையின் கடமைகள் விரிவடைந்து பெருகியுள்ளன. 2008-ஆம் ஆண்டு நவம்பரில் நடைபெற்ற மும்பை தீவிரவாதிகளின் தாக்குதலுக்குப் பின்பு, காவல் படை மற்றும் கடற்படைப் பாதுகாப்புப் படையை நவீனமயமாக்குதல் முக்கியத்துவம் பெற்றுள்ளது. புதுச்சேரி காவல் படைக்கு அத்தகைய நிகழ்வுகளை எதிர்கொள்வதற்குத் தேவையான நவீன கருவிகள் அளிக்கப்படும்.

**21.** நமது ஆட்சிப்பரப்பு ஒட்டுமொத்த வளர்ச்சிப் பெற செய்வதற்காக விரிவான விவாதங்களின் மூலம், இந்த ஆண்டுக்கான செயல் திட்டத்தை நீங்கள் ஒருமித்து உருவாக்குமாறு இந்த அவையை மனப்பூர்வமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**22.** தங்களது விவாதங்கள் வெற்றிபெற அனைவருக்கும் என் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*ஜெய் ஹிந்த்!*